பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:47 | 08.01.2024 திங்கட்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

## இலங்கையின் சனத்தொகை வீழ்ச்சியடைகிறது

இலங்கையின் சனத்தொகை நாட்டின் சனத்தொகை எதிர்வரும் காலங்களில்கணிசமாகக் குறையலாம் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகக் கற்கைகள் பேராசிரியர் இந்திரலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

பல காரணிகள் இதனை பாதித்துள்ளதாக பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பிறப்பு வீதம், 25 வீதமாக குறைவடைந்துள்ளமை பிரதான காரணங்களில் ஒன்று என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக கற்கைகள் பேராசிரியர் இந்திரலால் டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

“நம் நாட்டில் ஆண்டு பிறப்புகளின் எண்ணிக்கை மிக வேகமாக குறைந்து வருகிறது. உதாரணமாக, 2013 இல் நம் நாட்டில் பிறந்தவர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால், 2022 இல் பிறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 90,000 குறைந்துள்ளது. வேறுவிதமாகக் கூறினால், 2013 இல் பிறந்தவர்களின் எண்ணிக்கையுடன் 2022 இல் பிறந்தவர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டால் இது 25% குறைந்துள்ளது. பதிவான பிறப்புகளின் எண்ணிக்கை இறப்பு எண்ணிக்கையை நெருங்குகிறது” என்றார்.

இளம் சமூகம் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்வது உட்பட பல காரணிகளால் எதிர்வரும் காலங்களில் இலங்கையின் சனத்தொகை குறையலாம் என பேராசிரியர் இந்திரலால் டி சில்வா தெரிவித்துள்ளார். “நம் நாட்டில் ஏராளமான இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். ஒருபுறம் பிறப்புகள் குறைந்து இறப்புகள் வேகமாக அதிகரித்து வருகின்றன. சென்றவர்கள் திரும்பி வருவதில்லை.

நமது மக்கள்தொகை எதிர்காலத்தில் குறையும் போக்கைக் காட்டுகிறது.” என மேலும் சுட்டிக்காட்டினார்.

## பேரணியில் பங்கேற்றவர்கள் விடுதலை



வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி பயணித்த பேரணியில் கலந்து கொண்ட குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் இருந்து 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு பேரை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தினை கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் இருந்து,

கிழக்கு நோக்கி இடம்பெற்ற பேரணியில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர்களான, சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ் மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட ஏழு பேரே வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். தேர்தல் காலத்தில் போராட்டம் நடத்தியமை, பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் 7 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன், கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சிலருக்கு எதிரான வழக்கு விசாரணையும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. குறித்த இரண்டு வழக்குகளும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இன்று திங்கட்கிழமை (08) எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு தொடர்பாக பொலிஸார் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற வேண்டும் என தெரிவித்த போது பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்டு அனைவரையும் விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். இதனையடுத்து இரண்டு வழக்கையும் கிடப்பில் போட்ட நீதிமன்றம் பிரதிவாதிகள் அனைவரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டது. இந்த வழக்குகளில் பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவுடன் சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஷ் ஆஜராகியிருந்தார்.

## பங்களாதேஷ் தேர்தலில் பிரதமர்



## ஷேக் ஹசீனா வெற்றி

‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

# வடக்கு மக்கள் ரணிலுக்கு தக்க பாடம் புகட்டுவர் - திஸ்ஸ அத்தநாயக்க

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வடமாகாண மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு வடக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை முதல் நேற்று வரை வடக்கு மாகாணத்துக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே திஸ்ஸ அத்தநாயக்க குறித்த விடயத்தை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், வாக்கு அரசியலுக்காகவே ஜனாதிபதி வடமாகாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். அவரின் வருகையை வடக்கு மக்கள் விரும்பவில்லை.

அவர்கள் வீதிகளில் நின்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் போராடுகின்றார்கள். ரணிலை வடக்கு மக்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு வடக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்றார்.

## காங்கேசன்துறை – நாகப்பட்டினம் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்

காங்கேசன்துறை, நாகப்பட்டினம் ஆகியவற்றுக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கப்பல் சேவை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சோமசுந்தரம் நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளார்.

விரைவில் பயணச்சீட்டுக்கான முன்பதிவை மேற்கொள்ளவுள்ளதாகவும் அத்துடன் பயணச்சீட்டின் விலையை குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் நிர்வாக இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

கப்பல் சேவை குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சிவகங்கை என்ற பெயருடைய கப்பல் தனது முதல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இக்கப்பலானது பெப்ரவரி முதலாம் திகதி காலை 8 மணிக்கு நாகப்பட்டினத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து, நான்கு மணி நேரத்தில் காங்கேசன்துறையை வந்தடையும்.

150 பயணிகள் இந்தப் படகில் பயணிக்க முடியும் என்பதுடன், ஒரு பயணி 60 கிலோவினை கொண்டு செல்ல முடியும். விரைவில் பயணச்சீட்டுக்கான முன்பதிவை மேற்கொள்ளவுள்ளது.

# திருகோணமலையில் பொங்கல் விழா ஆரம்பம்





கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் 1008 பொங்கல் பானைகள், 1500 பரத நாட்டிய கலைஞர்கள், 500 கோலங்கள் ஆகியவற்றுடன் பொங்கலை வரவேற்று வைபவம் இன்று நடைபெற்றதுடன், பொங்கலை வரவேற்கும் முகமாக மாபெரும் பொங்கல் திருவிழா இன்று திருகோணமலையில் இடம்பெற்றது.


கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

## ஜனாதிபதிரணிலின் செங்கடல் அரசியல்

யேமனின் ஹூவுதி குழுவின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு எதிராக செங்கடலில் வணிகக் கப்பல் போக்குவரத்தைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுக் கூட்டணியில் இணையும் விக்கிரமசிங்க-ராஜபக்ஷ அரசாங்கத்தின் முடிவை எதிர்க்குமாறு முன்னிலை சோசலிஷக் கட்சி (FSP) நேற்று (07) பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகளை வலியுறுத்தியுள்ளது.

ஜனவரி 03 ஆம் திகதி BMICH இல் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அறிவிக்கப்பட்ட இந்த நடவடிக்கை அனைத்து அரசியல் கட்சிகளையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது என்று FSP இன் மூத்த பேச்சாளர் புபுது ஜாகொட தெரிவித்தார்.

முன்னாள் ஜே.வி.பி, திவாலான இலங்கை ஒரு விலையுயர்ந்த நடவடிக்கையில் இணைவதன் பின்னணி என்ன என்று கேள்வி எழுப்பினார். ஹூவுதிகளின் தாக்குதலுக்கு பதிலடியாக அமெரிக்கா சமீபத்தில் ‘ஒப்ரேஷன் ப்ராஸ்பெ ரிட்டி கார்டியன்’ தொடங்கியதை அவர் சுட்டிக்காட்டினார்.

காஸாவில் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான தற்போதைய இஸ்ரேலிய இராணுவப் பிரச்சாரத்திற்கு பதிலடியாக செங்கடல் வணிக கப்பல் மீதான தாக்குதல்கள் என்று ஹூவுதிகள் அறிவித்துள்ளனர். ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் இப்பிரகடனத்தை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளும் உடனடியாக பகிரங்கமாக எதிர்த்திருக்க வேண்டும் என்று பிரிந்து சென்ற ஜே.வி.பி குழு தெரிவித்துள்ளது. துரதிஷ்டவசமாக, அவர்கள் வசதியாக மௌனமாக இருந்தனர், ஜகொட, இந்தப் பிரச்சினையை தாமதமின்றி பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

வர்த்தகக் கப்பல்கள் மீதான ஹூவுதிகளின் தாக்குதலைத் தடுக்க செங்கடலுக்கு இலங்கை போர்க்கப்பலை அனுப்பும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரகடனம் தமக்கு ஆச்சரியமளிப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். ஹூவுதிகளின் தாக்குதல்களால் இப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுவதால் போர்க் கப்பல் அனுப்பப்படும் என ஜனாதிபதி கூறியதை ஏற்றுக் கொள்ள முடியாது என பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கண்மூடித்தனமான இஸ்ரேலிய தாக்குதல்களுக்கு எதிராக உலகளாவிய அபிப்பிராயம் அதிகரித்து வருவதால், அதன் சில உறுப்பினர்கள் உட்பட உலக சமூகம் தயங்கிய நேரத்தில், சர்ச்சைக்குரிய மேற்கத்திய இராணுவ நடவடிக்கையில் இலங்கை இணைய முற்படுவது ஆச்சரியமாக உள்ளது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, இராணுவ நடவடிக்கை ஆகியவற்றுக்கு எதிராகவே செங்கடலில் தாக்குதல் நடைபெறுகிறது. அந்த நிலையில் இலங்கை, இஸ்ரேலுக்கு ஆதரவாக செங்கடலில் இறங்குவதால் இலங்கைக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. பொருளாதாரத்தால் நலிவடைந்திருக்கும் இலங்கைக்கு அந்த நடவடிக்கை மேலதிக சுமையாக மாறிவிடும் அபாயம் உள்ளது.

அன்று செங்கடலில் வணிகக் கப்பல் போக்குவரத்திற்கு எதிராக கடந்த ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி ஹூவுதிகள் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். பலமுறை எச்சரிக்கப்பட்ட போதிலும், ஈரானுடன் இணைந்த ஹூவுதிகள் பல தாக்குதல்களை நடத்தினர். கடந்த வாரம், அவர்கள் ஆயுதமேந்திய ஆளில்லா மேற்பரப்புக் கப்பலை நிலைநிறுத்தினர், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பஹ்ரைன், பெல்ஜியம், கனடா, டென்மார்க், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, நியூஸ்லாந்து, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் சர்வதேச ஊடகங்கள் இறுதி எச்சரிக்கை என அறிவித்த சில மணி நேரங்களிலேயே ஹூவுதிகள் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். உலக வல்லரசுகளும், பலமான கடற்படையைக் கொண்ட நாடுகளும் இணைந்து செங்கடலைப் பாதுகாக்கப் போராடுகின்றன. இலங்கையிடம் பலமான கடற்படை இல்லை. தனது நாட்டு சொந்தக் குடிமக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இலங்கை ஏன் இத்தகைய விலையுயர்ந்த இராணுவ நடவடிக்கைகளில் ரணில் மூக்கை நுழைக்க முற்படுகிறார்.

# 5 ஆவது முறையாக ஆட்சியை பிடித்தார் ஷேக் ஹசீனா

பங்களாதேஷ் தேர்தலில் பிரதமர் ஷேக் ஹசீனாவின் தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றதால் அவர் 5 ஆவது முறையாகப் பிரதமராகிறார்.

எதிர்க்கட்சியின் புறக்கணிப்பைத் தொடர்ந்து வங்கதேச பங்களாதேஷ் வறுமையால் வாடிய போது அந்நாட்டின் கடுமையான பொருளாதார வளர்ச்சிக்கு அவர் தலைமை தாங்கினார்.



ஆனால் அவரது அரசாங்கம் பரவலான மனித உரிமை மீறல்களை செய்ததாகவும் இரக்கமற்ற எதிர்க்கட்சி ஒடுக்குமுறையை கையாண்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிரதமர் ஷேக் ஹசீனாவின் கட்சி போட்டியிட்ட இடங்களில் அந்தக் கட்சிக்கு எதிராக போட்டியிட யாரும் நிற்கவில்லை.

தற்காலிக அரசாங்கத்தின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஆளும் அரசாங்கம் ஏற்க மறுத்ததை அடுத்து, முக்கிய எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சி, அதன் கூட்டணி கட்சிகள் தேர்தலை புறக்கணித்தன.

# அலாஸ்கா விமானங்கள் இரத்து

171 போயிங் 737 MAX 9 விமானங்களை தரையிறக்க அமெரிக்க ஃபெடரல் ஏவியேஷன் அட்மினிஸ்ட்ரேஷன் (FAA) உத்தரவிட்டதை அடுத்து, அலாஸ்கா ஏர்லைன்ஸ் ஞாயிற்றுக்கிழமை 170 விமானங்களையும், திங்களன்று கூடுதலாக 60 விமானங்களையும் ரத்து செய்தது.

இன்னும் சில நாட்களுக்கு இந்த விமானங்களின் ரத்து தொடரும் என்பதால், இதனால் கிட்டத்தட்ட 25,000 பயணிகள் பாதிப்படைவார்கள்.

கடந்த சனிக்கிழமை,




174 பயணிகளை ஏற்றிச் சென்ற அலாஸ்கா ஏர்லைன்ஸ் விமானத்தின் அவசர வெளியேறும் கதவு நடுவானில் பிய்ந்து காற்றொரு பறந்தது. அதனையடுத்து, அந்த விமானம் அமெரிக்காவில் உள்ள போர்ட்லேண்டில் அவசரமாக தரையிறக்கப்பட்டது, அதிஷ்டவசமாக, அந்த விமானத்தில் இருந்த பயணிகளும் பணியாளர்களும் உயிர் தப்பினர். இச்சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பான சூழலை உருவாக்கியது.

# மோடியை விமர்சித்த மாலைதீவு அமைச்சர்கள் இடைநீக்கம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் லட்சத்தீவு பயணம் குறித்து அவதூறாக கருத்து தெரிவித்திருந்த மாலைதீவுகளைச் சேர்ந்த மூன்று அமைச்சர்களை அந்த நாட்டு அரசு இடைநீக்கம் செய்துள்ளது.

சமீபத்தில் பிரதமர் நரேந்திர மோடி லட்சதீவுகளுக்குச் சென்றிருந்தார். இதுதொடர்பான புகைப்படங்கள், வீடியோக்கள் வெளியாகியிருந்தன. அதில் ஆழ்கடல் பயணத்தையும் லைப் ஜாக்கெட் அணிந்து பிரதமர் மோடி மேற்கொண்டிருந்தார். கடற்கரையில் அமர்ந்திருப்பது, நடப்பது உள்ளிட்ட புகைப்படங்கள், வீடியோக்களும் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் பிரதமரின் இப்பயணம் குறித்து மாலைதீவு நாட்டு அமைச்சர்களான மரியம் ஷியுனா, மல்ஷா, ஹசன் ஜிஹான் ஆகியோர் பிரதமர் குறித்து கிண்டலாக பேசியிருந்தனர். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அவர்கள் சொன்னது தனிப்பட்ட கருத்து, மாலைதீவு அரசின் கருத்து அல்ல என்றும் அந்த நாட்டு அரசு விளக்கியுள்ளது.

# ஐந்து நாட்களின் பின்னர் மீட்கப்பட்ட மூதாட்டி

ஜப்பானை பூகம்பம் தாக்கிய நிலையில் 5 நாட்கள் கழித்து 90 வயது மூதாட்டி ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்

ஜப்பானில் உள்ள இஷிவாகா மாகாணத்தில் நேற்று கட்டடத்தில் உள்ள இடுப்பாடுகளை அகற்றிக் கொண்டிருந்தபோது ஒரு முனகல் சத்தம் கேட்டது. இதனை அடுத்து அங்கு மீட்பு பணியினர் பார்த்த போது 90 வயது மூதாட்டி ஒருவர் உயிரை கையில் பிடித்துக் கொண்டு நடுங்கிக் கொண்டு இருந்தார்.

இடிபாடுகளுக்கிடையே அவர் ஐந்து நாட்கள் உணவு, தண்ணீர் இன்றி இருந்தது தெரியவந்ததை அடுத்து உடனடியாக அவர் மீட்கப்பட்டார். ஆனாலும் அவர் உயிர்பிழைப்பது கடினம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். ஐந்து நாட்களுக்குப் பிறகு 90 வயது உயிருடன் மீட்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஞாபகார்த்த கலையரங்கம் திறப்புவிழா

அல்போன்ஸ் கிங்ஸ்லி வில்பிறேட் ஞாபகார்த்த கலை அரங்கத்தின் அடிக் கல் நாட்டுவிழா நேற்று (7) காலை 9:00 மணிக்கு வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலய வளா கத்தில் பங்குத்தந்தை அமல் ராஜ் அடிகள் தலைமையில் நடைபெற்றது. அவர்களால் அடிக்கல் நாட்டி வைக்கப் பட்டுள்ளது.

ஞாயிறு ஆராதனையை தொடர்ந்து நடைபெற்ற அடிக்கல் நாட்டுவிழாவில் வெற்றிலைக்கேணி பங்கு மக்கள், கலைஞர்கள் உட் பட பலர் கலந்து கொண் டனர். வடமராட்சி கிழக் கின் பிரபல தென்மோடி நாட்டுக்கூத்து கலைஞ னான அல்போன்ஸ்- கிங்ஸ்லி கடந்த வருடம் நவம்பர் முதலாம் திகதி காலமானார்.

## புத்தாண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு நாளை

புத்தாண்டின் முதலா வது பாராளுமன்ற அமர்வு நாளை (09) முதல் எதிர்வ ரும் 12 ஆம் திகதிவரை கூடும் என சபாநாயகர் தலைமையில் கூடிய பாரா ளுமன்ற விவகாரங்களுக் கான குழுவில் தீர்மானிக் கப்பட்டதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்க ளம் தெரிவித்துள்ளது.

நாளைய தினம் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல் லிணக்கத்திற்கான அலுவ லக சட்டமூலம், தேசிய நீரியல் சட்டமூலம் மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழு சட்டத்தின் கீழ் வர்த் தமானி இலக்கம் 2355/30 என்ற வர்த்தமானி பத்திரத் திற்கான உத்தரவுகள் விவா தத்திற்கு உட்படுத்தப்பட உள்ளன.

நீதிமன்றத்தை, நீதித் துறை அதிகாரத்தை அல் லது நிறுவனத்தை அவம திக்கும் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு தொடர்பாக 2023 நவம்பர் 8 ஆம் திகதி நடத்தப்பட்ட, ஒத்திவைக்கப்பட்ட விவா தம் ஜனவரி 10 ஆம் திகதி இரண்டாவது நாளாக நடைபெறவுள்ளதாக பாரா ளுமன்றத்தின் தொடர்பா டல் திணைக்களம் குறிப் பிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி வியா ழன் அன்று எதிர்க்கட்சிக ளால் முன்வைக்கப்பட வுள்ள சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ள துடன், தனிப்பட்ட உறுப் பினர்களின் பிரேரணை களை முன்வைப்பதற்கு 12 ஆம் திகதி வெள்ளிக்கி ழமை ஒதுக்கப்பட்டுள்ளது.

## 8 இலட்சம் பேரின் மின்சார இணைப்பு துண்டிப்பு

ஒரு வருட காலப்பகு தியில் மின்சார கட்ட ணத்தை செலுத்த தவறிய 08 இலட்சம் பேரின் மின் சார இணைப்புக்கள் துண் டிக்கப்பட்டுள்ளதாக பொரு ளாதார நெருக்கடியை தணிக்கும் துறைசார் கண் காணிப்புக் குழுவில் தக வல்கள் வெளியாகியுள் ளது. துண்டிக்கப்பட்ட இணைப்புக்களில் பெரும் பாலானவை ஏழை மக்க ளது இணைப்புக்கள் என் பது தெரியவந்துள்ளது மின்துண்டிப்பினால் குழந் தைகளின் ஊட்டச்சத்து முதல் மாணவர்களின் கற் றல் நடவடிக்கைகள் வரை பாதிக்கப்பட்டுள்ளதாக வும், இந்த நிலைமையி னால் எதிர்காலத்தில் பாதிக் கப்பட்ட சமூக அமைப்பு உருவாகுவதற்கு ஏதுவான சூழலாக இது காணப்ப டும் எனவும் துறைசார் கண்காணிப்புக்குழு தெரி வித்துள்ளது.



## நெல்லியடி பொலிஸார் சிரமதானம்

மிக தீவிரமாக பரவி வரும் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நோக் கில் தினம் நெல்லியடி பொலிஸார் நேற்று ஸ்ரீ பரமானந்த சிறுவர் முதி யோர் இல்லத்தில் சிர மதானம் செய்தனர்.

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி, பொலிஸ் பரிசோ தகர் காஞ்சனா விமலா வீரா தலைமையிலான பொலிஸ் குழுவினர் சிரமதானம் செய்த னர்.

## காலி சிறைச்சாலையில் ஸூம் தொழில்நுட்பம்

காலி சிறச்சாலையில் மூளைக் காய்ச்சலால் கைதி ஒருவர் உயிரிழந்துள்ள தால், காலி சிறைச்சாலை யில் இன்று (08) முதல் ஸூம் தொழில்நுட்பத்தின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சிறைச்சாலை ஆணையா ளர், ஊடகப் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

புதிய கைதிகள் அனை வரும் தற்போது அகுன கொலபலஸ்ஸ சிறைச்சா லைக்கு அனுப்பப்பட்டுள் ளதாக அவர் கூறினார்.

காலி சிறைச்சாலையில் கைதி ஒருவர் மூளைக் காய்ச் சல் காரணமாக கடந்த 3 ஆம் திகதி உயிரிழந்ததை யடுத்து, சிறைச்சாலையின் செயற்பாடுகளை கட்டுப்ப டுத்துவதற்கு சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், இந்த அறிகுறிகளை வெளிப் படுத்திய மேலும் 08 கைதி கள் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

## வேலைநிறுத்தம் செய்யும் மின் ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை


Kanchana Wijesekera (M.P.)
Minister of Power and Energy



அத்தியாவசிய சேவை யான மின்சார விநியோகத் திற்கு இடையூறு ஏற்ப டுத்தி வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்களின் சேவையை இடைநிறுத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜே சேகர உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 03, 04, 05 ஆம் திகதிகளில் மின்சார ஊழி யர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பணம் செலுத்தும் ஜன்னல்கள் மூடப்பட்டமை மற்றும் பொதுச் சேவைகள் வழங் கும் அலுவலகங்கள் துண் டிக்கப்பட்டமை தொடர் பில் பொது மக்கள் முறைப் பாடுகளைப் பெற்றுள்ள தாக அமைச்சர் மின்சார சபைத் தலைவருக்கு கடி தம் மூலம் தெரிவித்துள் ளார். எனவே மின்சார சபை நிர்வாகம் விடுமுறையை இரத்து செய்த போதும் பணிக்கு சமூகமளிக்காமல் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் தொடர்பிலும் மின்சார சபை தலைவரி டம் தகவல் கோரப்பட் டுள்ளது.

## மின்கட்டணத்திற்கு எதிராக சஜித் மனுத்தாக்கல்



தற்போதைய மின்கட் டணத்தை குறைக்க உத்த ரவிடுமாறு கோரி எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அடிப்படை உரிமை மனுவொன்றை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

## சிறைச்சாலைகளில் தொற்று நோய் அதிகரிப்பு

போதைப்பொருளுக்கு அடிமையாகியவர்களை கைதுசெய்து சிறையில டைக்கும் நடவடிக்கை அதிகரித்ததென சிறைச் சாலை சுகாதாரப் பிரிவு தீவிர கவனம் செலுத்தி வருவதாக சிறைச்சாலை சுகாதார சேவைப் பணிப் பாளர் நாயகம் வைத்திய ஹேமன் த.ரணசிங்க தெரி வித்துள்ளார்.

போதைப் பொருளுக்கு அடிமையாகிய கைதிக ளின் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைந்துள்ளதன் காரணமாக அவர்களுக்கு தொற்று நோய்கள் ஏற் படும் வீதம் அதிகரித்துள்ள தாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

மூளைக் காய்ச்சல் நோயால் ஒரு கைதி மர ணித்தமை உறுதிப்படுத் தப்பட்டதால் காலி சிறைச்சாலை நடவடிக் கைகள் மட்டுப்படுத்த சுகா தார பரிந்துரைக்கமைய நடவடிக்கை எடுத்துள்ள தாக சிறைச்சாலைகள் ஊட கப் பேச்சாளர் தெரிவித் துள்ளார்.

மேலும் காலி சிறைச் சாலையில் காய்ச்சல் நோய் அறிகுறி காட்டிய 8 கைதி களை கராப்பிட்டிய வைத் தியசாலையில் தங்கியி ருந்து சிகிச்சை பெற்று வரு வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## போதைப் பொருள் வர்த்தகர்களின் சொத்து பறிமுதல்

குடு ரொஸான், கவிந்து மதுரங்க, ஹெட்டியாரச் சிகே சிறில் ஆகிய போதைப் பொருள் வர்த்தகர்கள் மூவரின் சொத்துகள் கைப் பற்றப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

# முதல் தர கிரிக்கெட்டில் அதிக இரட்டை சதங்கள் புஜாரா சாதனை



இந்தியாவில் நடைபெறும் ரஞ்சி டிராபியில் ஜார்கண்ட் அணிக்கு எதிரான போட்டியில் இரட்டை சதம் அடித்த புஜாரா, முதல் தர போட்டியில் அதிக இரட்டை சதங்கள் அடித்த நான்காவது வீரர் என்ற சாதனையை படைத்தார்.

புஜாராவின் முதல் தர போட்டியில் இது 17 ஆவது இரட்டை சதமாகும். ஜார்கண்ட் அணிக்கு எதிரான ஆட்டத்தின் மூன்றாவது நாளில் புஜாரா தனது இரட்டை சதத்தை பூர்த்தி செய்தார். சௌராஷ்டிரா அணிக்காக விளையாடிய புஜாரா 30 பவுண்டரிகள் உதவியுடன் ஆட்டமிழக்காமல் 243 ஓட்டங்கள் எடுத்தார். இதையடுத்து, முதல் தர போட்டியில் அதிக இரட்டை சதங்கள் அடித்த அவுஸ்திரேலிய முன்னாள் ஜாம்பவான் சேர் டான் பிராட்மேன் இடம்பிடித்திருக்கும் பட்டியலில் புஜாரா இடம் பிடித்தார். சேர் டான் பிராட்மேன் முதல் தர போட்டியில் 37 இரட்டை சதங்கள் அடித்து முதலிடத்தில் உள்ளார். 36 இரட்டை சதங்கள் அடித்த இங்கிலாந்து முன்னாள் ஜாம்பவான் வாலி ஹம்மண்ட் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

**முதல் தர கிரிக்கெட்டில் அதிக இரட்டை சதம் அடித்த வீரர்கள்**

37 இரட்டை சதங்கள் - பிராட்மேன் (அவுஸ்திரேலியா)

36 இரட்டை சதங்கள் - ஹம்மண்ட் (இங்கிலாந்து)

22 இரட்டை சதங்கள் - ஹென்ட்ரன் (இங்கிலாந்து)

17 இரட்டை சதங்கள் - சட்க்ளிஃப் (இங்கிலாந்து)

17 இரட்டை சதம் - ராம்பிரகாஷ் (இங்கிலாந்து)

17* இரட்டை சதம் - புஜாரா (இந்தியா)

**ரஞ்சி கோப்பை வரலாற்றில் அதிக இரட்டை சதங்கள்**

வீரர்கள் விளையாடிய அணி 200கள்

பராஸ் டோக்ரா இமாச்சல பிரதேசம்/புதுச்சேரி - 9

சேதேஷ்வர் புஜாரா சௌராஷ்டிரா - 8*

அபினவ் முகுந்த் தமிழ்நாடு - 7

அஜய் சர்மா டெல்லி/இமாச்சல பிரதேசம்-7

மனோஜ் திவாரி பெங்கால் - 6

# சர்வதேச ஹொக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழாவை




சுவிற்சர்லாந்தில் உள்ள லொசானில் கடந்த 7 ஆம் திகதி சர்வதேச கொக்கி கூட்டமைப்பு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது.

உலகளாவிய ஹொக்கி குடும்பத்திற்கு நேற்று ஒரு சிறப்பு நாள். 1924 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் திகதி பிரான்ஸின் பாரிஸில் பிறந்த ஒரு கூட்டமைப்பிற்கான முதல் நூற்றாண்டு இருப்பு கொண்டாட்டத்திற்கு ஒரு காரணமாகும்.

பண்டைய ஈரான், எதியோப்பியா, எகிப்து மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகளில் ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறைகளுடன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இவ் விளையாட்டு உள்ளது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர், ஆனால் 1876 ஆம் ஆண்டு வரை முறையான விதிகள் வரையப்படவில்லை. சில ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பிறகு, ஜனவரி 7, 1924 அன்று பிரெஞ்சு தலைநகரில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் அடித்தளம் அமைக்கப்பட்டது.

அவுஸ்திரேலியா, பெல்ஜியம், செக்கோஸ்லோ வாக்கியா, பிரான்ஸ், ஹங்கேரி, ஸ்பெயின், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளின் ஆரம்ப உறுப்பினர்களைக் கொண்டு, பால் லூட்டி இந்த அமைப்பை நிறுவினார். FIH தலைவர் தயப் இக்ராம், முதல் 100 ஆண்டுகளின் சாதனைகள் குறித்து தனது திருப்தியை வெளிப்படுத்தினார்: “இன்று நாம் வரலாற்றின் விளிம்பில் நிற்கின்றோம், ஹொக்கி உலகில் அர்ப்பணிப்பு, ஆர்வம் மற்றும் வளர்ச்சியின் 100 ஆண்டுகளைக் குறிக்கிறோம். இது வெறும் கொண்டாட்டம் அல்ல இது ஒரு நூற்றாண்டின் பின்னடைவு, முன்னேற்றம் மற்றும் ஹொக்கி சமூகத்தின் உடைக்க முடியாத மனப்பான்மை ஆகியவற்றின் நினைவாக உள்ளது” என்று மக்காவ்வில் பிறந்த ஜனாதிபதி கூறினார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 08.01.2024 அன்று வெளியிடப்பட்டது.